www.Padasalai.Net. www.Trb Tnpsc.Com

# இரண்டாம் இடைப் பருவ பொதுத் தேர்வு - 2019

## பதினொன்றாம் வகுப்பு

பதிவு எண் | | | | | | |

நேரம்: 1.30 மணி **பொதுத்தமிழ்** மதிப்பெண்கள்: 45

**I. பலவுள் தெரிக:** **7×1=7**

1. கூற்று 1 : தஞ்சைப் பெரிய கோவிலுள்ள ஓவியங்களை எஸ்.கே. கோவிந்தசாமி கண்டறிந்தார்.

   கூற்று 2 : அங்குள்ள சோழர் காலத்து ஓவியங்கள் ஃபிரெஸ்கோ வகையைச் சார்ந்தவை.

   அ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு. ஆ) கூற்று இரண்டும் தவறு.

   இ) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி. ஈ) கூற்று இரண்டும் சரி.

2. கீழுள்ளவற்றைப் பொருத்தி விடை தேர்க:

   அ) விரியன் - 1. தண்டை

   ஆ) திருகுமுருகு - 2. காலாழி

   இ) நாங்கூழ்ப்புழு - 3. சிலம்பு

   ஈ) குண்டலப்பூச்சி - 4. பாடகம்

   அ) 3 4 2 1 ஆ) 3 1 4 2 இ) 4 3 2 1 ஈ) 4 1 3 2

3. பெண்கள் விளையாடும் விளையாட்டு வகைகளுள் ஒன்று

   அ) சாழல் ஆ) சிற்றில் இ) சிறுதேர் ஈ) சிறுபறை

4. 'ஜனப்பிரளயம்' என்னும் வடமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச்சொல் எது?

   அ) மக்கள் அலை ஆ) உயிர் அலை இ) மக்கள் வெள்ளம் ஈ) மக்கள் அவை

5. கூற்று : எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான பதிற்றுப்பத்து, புறம் சார்ந்த நூல்.

   காரணம் : சேர மன்னர் பதின்மரின் சிறப்புகளைக் கூறுகிறது இந்நூல்.

   அ) கூற்று சரி; காரணம் தவறு. ஆ) இரண்டும் சரி.

   இ) இரண்டிற்கும் தொடர் இல்லை. ஈ) கூற்று தவறு; காரணம் சரி.

6. அழகும் அறிவும் இளமையும் வாய்த்தவன் - யார் யாரிடம் கூறியது?

   அ) அமைச்சர் கவிஞரிடம் ஆ) மன்னர் அமைச்சரிடம்

   இ) அமைச்சர் மன்னரிடம் ஈ) மன்னர் அமுதவல்லியிடம்

7. ஆக்கப்பெயர் விகுதி பெறாத சொல்லைத் தேர்க.

   அ) காவலாளி ஆ) மேலாளர் இ) உதவியாளர் ஈ) ஆசிரியர்

**II. எவையேனும் ஐந்தனுக்கு மூன்று வரிகளில் விடையளி:** **5×2=10**

8. இந்தியக் கட்டடக்கலையின் மூன்று வகைகள் யாவை?

9. ஒலோகமாதேவீச்சுரம் கோவில் கல்வெட்டில் காணலாகும் பெண் அதிகாரிகளின் பெயர்களிலிருந்து நீங்கள் அறிவது யாது?

10. அயர்ந்து, எழுந்த - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

11. தொடர் அமைத்து எழுதுக: அன்றொரு நாள், நிழலிலிருந்து

Kindly send me your key answers to our email id - padasalai.net@gamil.com

Scanned by CamScanner

www.Padasalai.Net. www.Trb Tnpsc.Com



12. 'நாழிக்குள் திணிக்கும் மருந்துபோல்' என்னும் உவமையை ஜீவானந்தம் பேச்சுடன் ஒப்பிடுக.
13. உழைப்பாளர்களின் தோள் வலிமையால் விளைந்தன யாவை?
14. அலைகடல், புதுக்கியவர் - இலக்கணக்குறிப்புத் தருக.

**III. எவையேனும் மூன்றனுக்கு குறுகிய வடிவில் விடையளி:** 3×4=12

15. ஃபிரெஸ்கோ ஓவியங்கள்; கற்றளிக் கோவில்கள் குறித்து நீவிர் அறிவன யாவை?
16. கலைச்சொல்லாக்கத்திற்கும் அகராதிக்கும் உள்ள வேறுபாடு யாது?
17. சிங்கி பெற்ற பரிசுப் பொருட்களாகக் குற்றாலக் குறவஞ்சி கூறுவன யாவை?
18. ஜீவாவின் பேச்சுநடை குறித்துச் சுந்தரராமசாமி கூறுவன யாவை?
19. சேரநாடு செல்வவளம் மிக்கது என்ற கூற்றிற்குரிய காரணங்களைக் குறிப்பிடுக.

**IV.** 20. 'சிற்றூரும் வரப்பெடுத்த வயலும்' எனத் தொடங்கும் புரட்சிக்கவி பாடலை அடிபிறழாமல் எழுதுக. 1×4=4

**V. எவையேனும் ஒன்றனுக்கு விரிவான விடையளி:** 1×6=6

21. 'கல்லும் கதை சொல்லும்' - என்னும் தொடர் தஞ்சைப் பெரிய கோவிலுக்குப் பொருந்துவதை விளக்கி எழுதுக.

(அல்லது)

22. பாரதிதாசன் ஒரு 'புரட்சிக்கவி' என்பதை உதாரன் பாத்திரம் வாயிலாக மெய்ப்பிக்க.

**VI. எவையேனும் ஒன்றனுக்கு விரிவான விடையளி:** 1×6=6

23. சிம்பொனித் தமிழரும் ஆஸ்கர் தமிழரும் இசைத்தமிழுக்கு ஆற்றிய பணிகளை நும் பாடப்பகுதி கொண்டு தொகுத்தெழுதுக.

(அல்லது)

24. சிந்தனைப் பட்டிமன்றத்தின் நிகழ்வுகளைச் சுவை குன்றாமல் தொகுத்து எழுதுக.

---------

திரு. ச. அருள்நேரு மு.க., ஆ.நி., இ.கல்.,
முதுகலைத் தமிழாசிரியர்,
ஸ்ரீ. இரமண மகரிஷி பதின்ம மேல்நிலைப்பள்ளி,
காவேரியாம்பூண்டி 606604
திருவண்ணாமலை மாவட்டம்.
9894760547

Kindly send me your key answers to our email id - padasalai.net@gamil.com

Scanned by CamScanner